# THE PSYCHO-SOCIAL IMPACTS ON SEEKING FOR PUBLIC SCHOOLS' STUDENTS TOWARDS PRIVATE TUITION CLASSES

**A.R.A Asraj**

Department of Sociology,
South Eastern University of Sri Lanka, Sri Lanka

*asrajrazaak97@gmail.com*

**ABSTRACT:** *Private classes are a common phenomenon in the world. In Sri Lanka, the government has been introducing free education since 1931 and continuously providing free education to students from school to university, but the number of students seeking private classes is increasing. Most of the studies conclude that private classes do not have a significant influence on the attainment of higher education, and some scholars argue that private classes are a burden to students. On the other hand, some ideas are being put forward that private education leads students to better results. Beyond that, conditions are increasing for students to move to private classes. Based on these factors, students seek private classes. This study aims to identify that the influential Psychosocial factors of the student's curiosity to seeking private tuition class. For this purpose, quantitative and qualitative methods were used, under the Kalmunai Education Zone, Maruthamunai was selected as a sample. In the purposive sampling technique, data collected from students who following higher studies in Arts, Science, and Mathematics in two National Schools in the Maruthamunai. Questioner method and unstructured interviews were used as data collecting techniques. Data were analyzed through content analysis and MS Excel software. The results showed that Psychosocial factors such as the attractiveness of friends, relations and neighbors, private educational institutions, the educational ambitions are playing as a major impact on student's curiosity to seeking private tuition class. Therefore, based on the impact of such factors on the interest in private classes, there should be a focus on conducting policy classes related to private classes in the future.*

**Keywords:** Public Schools' Students, Seeking, Private classes, Psychosocial factors

## 1. அறிமுகம்

உலகில் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்ற ஓர் உலகளாவிய நிகழ்வாக தனியார் வகுப்புக் மாறிவருகின்றது எனபதை பல்வேறு ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள் (பிரேய மற்றும் லைகின்ஸ், 2012). மேலும், தனியார் வகுப்புக்கள் பரவலான மற்றும் முன்னேற்றமான கல்வி முறைக்கு ஓர் சான்றாக உள்ளது ('ங், 2015). தனியார் வகுப்பு என்பது இலங்கை மற்றும் பங்களதேஸ் போன்ற அபிவருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் மட்டுமன்றி பல அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் ஓர் பொதுவான நிகழ்வாக உள்ளது. உதாரணமாக அபிவிருத்தியடைந்த நாடுகளான ஜப்பான், அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்றவற்றில் மாணவர்கள் தங்களது கல்விக்கான மேலதிக அறிவினை தனியார் வாகுப்புக்களினுடாக பெற்றுக்கொள்கின்றார்கள். மேலும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில், குறிப்பாக ஆசியாவில் உள்ள பல நாடுகளில் மாணவர்கள் தனியார் வாகுப்புக்களினுடாக கல்வியை பெற்றுக் கொள்வது மிக வேகமாக வளர்ச்சியடைகின்ற நிகழ்வாக உள்ளது என ப்ரே (2007) வலியுறுத்துகின்றார். இதனால், தனியார் வகுப்புக்கள் கல்வித் துறையில் ஒரு குறிபிட்டத்தக்க இடத்தைப் பெற்று வருகின்றது.

இவ் தனியார் வகுப்புக்கள் பிரதான இரண்டு காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றது. ஒன்று பாடசாலைகளில் தங்களது கல்வி அடைவினை தெடர்ச்சியாக பேணுவதற்கும், இரண்டு பிரதான பாடங்களில் உள்ள குறைபாடுகளை அல்லது சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்காகவும் அமைகின்றது ('ங், 2015 சோங் மற்றும் பலர், 2013 ). அதேபோல், குறைந்த கல்வி அடைவு மட்டத்திலுள்ளவர்கள் தமது நிலையினை அதிகரிப்பதற்காக தமது

நண்பர்களை கொண்டு இவ் தனியார் வகுப்புக்களை நாடுகின்றார்கள் ('ங், 2015 சோங் மற்றும் பலர், 2013). அதேவேளை, இத் தனியார் வகுப்புக்கள் குறைந்த கல்வி அடைவு மட்டத்திலுள்ள மாணவர்களை விடவும் அதிக கல்வி அடைவு மட்டத்திலுள்ள மாணவர்களுக்கே அதிக நுழைவு வாய்ப்பினை கொடுத்து இணைத்துக் கொள்கின்றன (குயில்ல மற்றும் போஸ், 2014 குக், 2013). உலகளாவிய ரீதியில் தனியார் வகுப்புக் கல்வி என்பது வேகமாக வளர்ச்சியடைவதன் காரணமாக ஓர் தேவையாக மாறியுள்ளது (பல்லேஜெதரா, 2011).

தனியார் வகுப்புக்கள் சில நாடுகளில் வெவ்வேறு தன்மைகளுடன் இயங்குகின்றன. பாடசாலை கல்விசார் பாடங்களுடன் பெறப்பட்ட அறிவினை மேலும் மேம்படுத்தும் ஓர் செயன்முறையாக இடம்பெறுகின்றது (பிரேய மற்றும் லைகின்ஸ், 2012). மேலும் தனியார் வகுப்புக்கள் என்பது மாணவர்கள் தங்களது கல்வியில் மேலதிகமான அறிவினை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் துறைசார் ஆசிரியர்களிடம், விரிவுரையாளர்களிடம் மற்றும் பட்டதாரிகளிடம் பணம் கொடுத்து தமது கல்விக்கு மேலதிமாக அறிவை பெற்றுக் கொள்ளும் செயன்முறையாகும் என சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர் (றிஜ்ஜல், 2016). இத்தகைய தனியார் வகுப்புக்கள் இரண்டு வகையான கட்டமைப்பில் இடம்பெறுகின்றன. ஒன்று, மாணவர்கள் பாடஆசிரியர்களிடம் சென்று கற்றல். அதாவது பாடம் தொடர்பான ஆசிரியர்களை மாணவர்கள் தேடி கற்றல். இரண்டாவது, மாணர்களை தேடி ஆசிரியர்கள் சென்று கற்பித்தல். இவ் கட்டமைப்பின் அடிப்படையில் இலங்கையில் மூன்று வகையான தனியார் வகுப்புகள் காணப்படுகின்றன. ஒன்று, தனித்துவமான தனியார்வகுப்பு (ஐனெரஎயைட வரவைழைெ உடயளள) : இவ் வகையானது ஒன்று அல்லது மூன்றுக்கு குறைந்த மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கற்பிக்கு முறை. இரண்டு, குழு தனியார்வகுப்பு (புசழரி வரவைழைெ உடயளள) : இவ் முறையானது 5-50 வரையிலான மாணவர்களை கொண்டு கற்பிக்கும் முறையாகும். மூன்றாவது, பொதுவான அல்லது மண்டப தனியார்வகுப்பு (ஊழஅஅழெ ழச ர்யடட வரவைழைெ உடயளள) : இவ் மூன்றாவது முறையில் சுமார் 50-1000 வரையிலான மாணவர்களை பெரிய அறை ஒன்றில் உள்ளடக்கி பாடங்களை பொதுவாக கற்கும் முறை. இலங்கையில் பெரும்பான்மையான தனியார்வகுப்புக்கள் இவ் மூன்றாவது முறையிலேயே இடம்பெறுகின்றன (அஸங்க, 2012). மேலும், தனியார் வகுப்புக்கள் என்பது மீத்திறன் குறைவான, மெல்லக்கற்கும் மாணவர்களுக்கே தேவையான ஒன்றாகும் (சந்துடுர், 2016). இவ்வாறான விளக்கத்தினையும், வரையறைகளையும் மற்றும் வகைகளையும் உலகளாவிய ரீதியாகவும், இலங்கையிலும் தனியார் வகுப்புக்கள் கொண்டுள்ளன. சில்வா (1994) என்பவரின் கருத்துப்படி இலங்கையில் 1990ஆம் ஆண்டில் தரம் ஆறாம் ஆம் ஆண்டு மாணவர்களில் என்பது வீதமான (80மூ) மாணவர்கள் தனியார் வகுப்புக்கு செல்கின்றனர், இதே போன்று தரம் பதினொராம் ஆம் ஆண்டு மாணவர்களில் எழுபத்தைந்து சதவீதமான (75மூ) மாணவர்கள் தனியார் வகுப்புக்கு செல்கின்றனர்.

அதுறுபன் (2013) மற்றும் பலரினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் எழுபத்தைந்து சதவீதமான (75மூ) இலங்கை மாணவர்கள் உயர் கல்வி மற்றும் உயர்நிலைப் பாடசாலைகளில் இணைந்து கொள்ள வேண்டும் என்பதற்காக தனியார் வகுப்புக்களுக்கு செல்கின்றனர் என முன்வைக்கின்றார்கள். மேலும், சிரேஷ்ட இரண்டாம் நிலை மாணவர்கள் பாடசாலைக் கல்வியை பெற்றுக் கொள்வதனை விட தனியார் வகுப்புக் கல்வியினையே பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக தனியார் வகுப்புக் கல்வியில் பங்குபற்றுகின்றார்கள் (ப்ரேகேம் மற்றும் பலர், 2012).

இதே போன்று, இலங்கையில் அரச பாடசாலைகளை சேர்ந்த கனிஷ்ட இரண்டாம் நிலை மாணவர்கள் மற்றும் சிரேஷ்ட இரண்டாம் நிலை மாணவர்கள் பாடசாலை கல்வியினை பொருட்படுத்தாது தனியார் வகுப்பு கல்விக்கு முக்கியத்தும் வழங்குகின்ற நிலைமை காணப்படுகின்றது. அத்தோடு குடும்பங்களில் கல்விக்கான வருவு செலவில் நாற்பத்தைந்து வீதமான (45மூ) வருமானம் தனியார் வகுப்புக்களுக்கு செலவு செய்யப்படுகின்றது (ஐளெவவைரவந ழக °ழடைஉல ளுவரனநைளஇ 2017). இந்தவகையில் எழுபத்தைந்து வீதமான (75மூ) அரச பாடசாலை மாணவர்கள் இலங்கையில் தனியார் வகுப்புக்களை நாடுகின்றனர் என்பதை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன (அஸங்க, 2012).

எனவே மேற்குறித்த விடயங்கள், மாணவர்கள் தனியார் கல்வியை நாடுவது அதிகரித்துக் கொண்டு வருவதனை முன்வைக்கின்றது. குறிப்பாக இலங்கையில் நிலவுகின்ற அரசகல்விக் கொள்கைளில் காணப்படுகின்ற குறைபாடுகள், கல்வியில் காணப்படுகின்ற போட்டித் தன்மைகள், தனியார் கல்வி நிறுவனங்களின் கவர்ச்சியான விளம்பரங்கள் ஆகியன இத்தகைய அதிகரித்த நாட்டத்திற்குக் காரணமாக அமைகின்றமையை வெளிப்படுத்திக் காட்டுகின்றது. கல்முனை கல்வி வலய அலுவலக (2021) அறிக்கையின்படி, கல்முனை கல்வி வலயத்தில் ஆறுபத்தைந்து பாடசாலைகளில் நான்காயிரத்து ஐநூற்றி அறுபத்தாறு (40,566) மாணவர்கள் கல்விகற்கின்றனர். இவர்களில் சிரேஷ்ட இரண்டாம் நிலை மாணவர்கள் சுமார் ஐயாயிரத்துதொரு (5001) மாணவர்கள் உள்ளனர். இதே வேளை, இவ் வலயத்தில் பதிவு செய்யப்பட்ட எழுபத்தைந்து (75) தனியார் வகுப்புக்கள் காணப்படுகின்றன இவற்றில் பதினைந்து (15) தனியார் வகுப்புக்களுக்கு எட்டாயிரத்து முன்நூற்றி எழுபத்திரண்டு (8372) இரண்டாம் நிலை

மாணவர்கள் கல்வியை நாடிச் செல்கின்றனர். எனவே கல்முனைக் கல்வி வலயத்திலும் மாணவர்கள் தனியார் கல்வியை நாடுவதில் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றமையை இவ்வறிக்கை முன்வைக்கின்றது. எனவேதான் இவ்வாறு தனியார் கல்வியை நாடுவதன் ஆர்வத்தின் பின்னணியில் காணப்படுகின்ற உளச்சமூக காரணங்களைப் பற்றிக் கண்டறிய இவ்வாய்வு முனைவதனால், இவ் ஆய்வானது முக்கியத்தும் பெறுகின்றது.

## 2. ஆய்வுப் பிரச்சினை

இலங்கை அரசினால் 1931ம் ஆண்டில்லிருந்து இலவசக் கல்வி அறிமுகப்படுத்தி அது தொடர்ச்சியாக பல வளர்ச்சியினையும், அபிவிருத்தியையும் இலவசமாக மாணவர்களுக்கு வழங்குகின்ற போதும் ஏன் அரச பாடசாலை மாணவரக்ள தனியார் வகுப்புக்களை நாடுகின்றனர்? என்கின்ற கேள்வி பல தளங்களில் முன்வைக்கப்படுகின்றது. அண்மைய கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2019ஆம் ஆண்டு அறிக்கைகள் தனியார் வகுப்புக் கல்வி நிறுவனங்கள் அதிகரித்துள்ளமையை அடையாளப்படுத்துகின்றன. அசங்க (2012) என்பவரின் ஆய்வானது, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, சமூகப் போட்டித் தன்மை மற்றும் குடும்பங்களின் வருமானம் போன்றவற்றின் அதிகரிப்பினால், மாணவர்கள் மேல்நிலை பாடசாலைகளில் மற்றும் பல்கலைக்கழங்களில் நுழைவினை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை நோக்கமாக கொண்டும் பெற்றோர்கள் பிள்ளைகளை தனியார் வகுப்புக்களக்கு அனுப்புகின்றனர் என்பதை வெளிப்படுத்துகின்றது. எனவே, இவ் ஆய்வுகள் மாணவர்களிடையே தனியார் கல்வி நிறுவனங்களை நாடுகின்றமையை பல்வேறு காரணிகள் தவிர்க்க முடியாதவகையில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றமையைப் அடையாப்படுத்தப்படுகின்றன. தேசிய மட்டத்தில் இலவசக்கல்வியானது பல்கலைக்கழகம்வரை இலவசமாக வழங்குகின்றது. வருடா வருடம் கல்விக்கு 3.5மூ அரசு செலவிடுகின்றது. இருந்த போதிலும் தனியார் வகுப்புக்களை நாடும் நிலைமை ஏன் அதிகரிக்கின்றது? என்பது வினாவாக உள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட விடயங்கள் தனியார் கல்வியை மாணவர்கள் நாடுவதில் எவ்வாறான காரணங்கள் செல்வாக்குச் செலுத்துவதனை சுட்டிக்காட்டுகின்றன. இத்தகைய காரணங்களுக்கு மத்தியில் கல்முனைப் பிரதேசத்திலுள்ள மாணவர்கள் ஏன் தனியார் கல்வியை நாடுகின்றனர், அவ்வாறு தனியார் கல்வியை நாடுவதில் , எத்தகைய உளச்சமூக் காரணிகள் பின்னணியில் இருக்கின்றது என்பதனை இவ்வாய்வு பிரச்சினையாகக் கொண்டு ஆய்வை முன்னெடுக்க முனைகின்றது. குறிப்பாக, இரண்டாம் நிலை மாணவர்கள் தனியார் வகுப்புக்களுக்கு நாடுவதில் செல்வாக்கு செலுத்தும் உளச்சமூக காரணிகள் தொடர்பாக தேசிய மட்டத்தில் ஆய்வுகள் முன்வைக்கப்படவில்லை எனும் ஆய்வு இடைவெளியை (Research Gap) நிரப்பும் முகமாக இவ் ஆய்வானது இடம்பெறவுள்ளது.

## 3. ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வானது இதன் இலக்கை அடைவதற்காக பின்வரும் நோக்கத்தை முன்வைக்கின்றது. ‘‘பாடசாலை மாணவர்கள் தனியார் வகுப்புக்கள் மீதான ஆர்வம் செலுத்துவதில் செல்வாக்கு செலுத்தும் உளச்சமூகக் காரணிகளை அடையாளம் காணுதல்’’

## 4. ஆய்வு முறையியல்

### 4.1. மாதிரி

ஆய்வின் நோக்கத்தை அடைந்து கொள்ளும் முகமாக மாதிரி அலகுகளைத் தெரிவு செய்யும் முறைமை இவ்வாய்வில் பின்பற்றப்படுகின்றது. இதற்காக நோக்கமாதிரி ர்ரசிழளளைபெ ளுயஅிடலைபெ) ஆய்வுக்கான மாதிரியைத் தெரிவுசெய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையில் கல்முனைக் கல்வி வலயத்திற்குட்பட்ட மருதமுனைப் பிரதேசத்தில் காணப்படுகின்ற கமு.கமு. ஷம்ஸ் மத்திய கல்லூரி மற்றும் கமு.கமு. அல்-மனார் மத்திய கல்லூரி ஆகிய இரண்டு தேசிய பாடசாலைகளும் ஆய்வு மாதிரியாக தெரிவு செய்யப்பட்டுள்ளன. இப் பாடசாலைகளின் சிரே'ட இரண்டாம்நிலைக் கல்வி கற்கின்ற கலை, விஞ்ஞான, கணிதப் பிரிவு சேர்ந்த ஐநூற்றி நான்கு மாணவர்களில் (504) இருநூற்றி பதினாறு (216) மாணவர்கள் ஆய்வுக்கான தரவுசேகரிப்பு மாதிரகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர், இவர்களில் நூற்றியெண்பது (180) மாணவர்களுக்கு வினாகொத்துக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன முற்பது (30) மாணவர்கள் ஆழ்ந்த நேர்காணலுக்குட்படுத்தப்பட்டு ஆய்வுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டன.

### 4.2. தரவு சேகரிப்பு நுட்பங்கள்

இவ் ஆய்வில் பண்புசார், அளவுசார் ஆய்வு முறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் முதலாம் நிலைத்தரவு மற்றும் இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பு

முறைகளினூடாக இவ் ஆய்வுக்கான தரவுகள் பெறப்பட்டன. அந்தவகையில் முதலாம் நிலைத்தரவு சேகரிப்புக்காக இருநூற்றி பதினாறு மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட நூற்றியெண்பது மாணவர்களிடம் வினாகொத்துக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. பகிர்ந்தளிக்கப்பட்ட நூற்றியெண்பது வினாகொத்துக்களில் நூற்றி நாற்பது வினாகொத்துக்களே ஆய்வாளனால் சேகரிக்கப்பட்டு, தரவுகளும் சேகரிக்கப்பட்டன. மேலும், முப்பதாறு மாணவர்களிடம் ஆழ்ந்த நேர்காணல் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. அத்தோடு, ஆய்வுக்குத் தேவையான, இரண்டாம் நிலைத்தரவுகளாக கல்முனை மநாகர சபை அறிக்கை, காரைதீவு பிரதேச சபை அறிக்கை, நிந்தவூர் பிரதேச சபை அறிக்கை, புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இணையத்தள தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டன. மேலும் இவ்வாய்வுக்கான ஆய்வுப் பாகுப்பாய்வானது நுஓஊநுடு கணினி மென்பொருட்களினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டன.

இம்முறைகள் ஆய்வுக்கான தரவுகளை சேகரிப்பதற்கு மிகவும் பிரயோசனமாக அமைந்தது. ஆழமான கலந்துரையாடல் மூலம், அவர்களின் வாழ்கை அனுபவங்களை மிகவும் விரிவாகவும், தெளிவாகவும் முன்வைத்தனர். இவர்கள் மிகவும் பூரணமாகவும், சுதந்திரமாகவும் அவர்களின் தகவல்களை வழங்கினார்கள்.

### 4.3. தரவுப் பகுப்புாய்வு முறைகள்


மேற்படி சேகரிக்கப்பட்ட தரவுகளில் அளவுசார் தரவுகள் புள்ளிவிபரவியல் முறை (ஞரயவெவையவளைந- ஸ்ீளுஞ- ஆள ழுககஉைந நுஒஉநட) முறையினூடாகவும், பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வு முறை (ஞரயவெவையவளைந – ஊழவெநவெ யுயெடலளளை) என்பவற்றினூடாக அனைத்துவகையான தரவுகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

## 5. தரவுப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

இப் பகுதியானது, மாணவர்களின் தனியார் வகுப்பு ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் உளச்சமூக் காரணிகளை பகுப்பாய்வு செய்கின்றது. குறிப்பாக, உளவியல் காரணிகளான நண்பர்களின் கவர்ச்சி, ஏனையவர்களின் கவர்ச்சி, தனியார் கல்வி நிலையங்களின் கவர்ச்சி, கல்வி இலட்சியம் போன்றன காரணிகள் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

### 5.1 உளச்சமூக் காரணிகள்

மனிதனின் நடத்தைகள், சிந்தனைகள், வடிவமைப்பில் சமூக-உளவியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள் (ஜயஸிங்க, 2005). அந்த வகையில், ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பொரும்பான்மையான மாணவர்கள் தனியார் வகுப்புக்களை நாடிச் செல்வதில் உளவியல் காரணிகளும் செல்வாக்குச் செலுத்துவதனை ஆய்வு வெளிப்படுத்துகின்றது. குறிப்பாக, தொன்னூறு வீதமான (90%) மாணவர்களின் தனியார் வகுப்புக் கல்வி ஆர்வத்தில் கல்வி இலட்சியத்தினை அடைதல், அறுபத்தாறு வீதமான (66%) மாணவர்கள் ஏனையவர்களின் கவர்ச்சி, தொன்னுத்தைந்து வீதமான (95%) மாணவர்கள் தனியார் வகுப்பு நிறுவனங்களின் கவர்ச்சி போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதனை ஆய்வு கண்டறிந்துள்ளது. இவற்றினை பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.





வரைபடம் 4.3: மாணர்களின் தனியார் வகுப்பில் உளவியல் காரணிகளின் செல்வாக்கு செலுத்தும் விதம்
(மூலம்: முதலாம் நிலைக் கள ஆய்வு, 2022)

### 5.1.1. மாணவர்களின் கல்வி இலட்சியங்கள்

இயற்கைசார்ந்த பொருளாதாரங்களைப் பெற்றுக் கொள்ளும் சூழல்கள் குறைவாக இப் பிரதேசத்தில் காணப்படுவதனால், கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக கல்வியின் மூலம் பொருளாதாரம், மற்றும் சமூக அந்தஸ்தை அடைந்து கொள்வதில் இப்பிரதேச மக்கள் ஆர்வம்

செலுத்துகின்றார்கள் என மௌலான (2005) குறிப்பிடுகின்றார். மேலும் இவர் விளக்குகையில், கல்வி இலட்சியம் என்பது பெரும்பாலான மாணவர்கள் சிறந்த கல்வி அடைவினை அடைய உந்துகின்றார்கள் என்கின்றார்.
ஆய்வுக்குட்படுத்தப்பட்ட தொன்னூற்றொரு வீதமான (91%) மாணவர்கள் பாடசாலையில் கல்வியினை பெற்று, அதற்கு மேலதிகமாக தனியார் வகுப்புக்களில் அறிவினைப் பெற்றுக் கொள்வதன்னூடாக பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என நம்புகின்றனர். இத்தகைய நம்பிக்கை அவர்கள் தனியார் வகுப்புக்களை நோக்கி செல்வதில் செல்வாக்குச் செலுத்துகின்றமை குறிப்பிடப்படுகின்றது.

மேலும் தொன்னூற்றொன்பது வீதமான (99%) மாணவர்கள் தனியார் வகுப்புக்களுக்கு சென்ற பின்னர் சாதாகமான கல்வி அடைவு ஏற்பட்டுள்ளதாகவும், மேலதிக கற்றல் மூலம் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளை பெற முடியும் என தொன்னுதேழு வீதமான (97%) மாணவர்கள் குறிப்பிடுகின்றார்கள். அத்தோடு தனியார் வகுப்புக்களுக்குச் செல்வதனால் சிறந்த பெறுபேறுகள் கிடைப்பதாக என்பதொரு வீதமான (81%) மாணவர்கள் ஏற்றுக் கொள்கின்றார்கள். இவற்றை பின்வரும் வரைபு விளக்குகின்றது.




வரைபடம் 5.1.1: தனியார் வகுப்புக்ளும் சிறந்த பெறுபேறுகளும்
(மூலம்: முதலாம் நிலைக் கள ஆய்வு, 2022)

எனவே மாணவர்கள் கல்வியடைவில் சிறந்த அல்லது சாதாகமான, உயர்வான அடைவுகளை அடைய வேண்டும் என்கின்ற மனப்பாங்கு பெரும்பான்மையான மாணவர்கள் தனியார் வகுப்புக்களுக்கு செல்வதில் செல்வாக்குச் செலுத்துகின்றது, என்பதை ஆய்வு முன்வைக்கின்றது. தனியார் வகுப்புக் கல்வியின் உதவிகள்ளுடன் உயர் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை ஏற்றுக் கொள்கின்றார்கள். அதாவது தனியார் வகுப்புக்களுக்கு சென்ற பின்னர் சாதாமான கல்வியடைவு, கல்வி ஆர்வம் ஏற்பட்டுள்ளதாக பெரும்பான்மையான மாணவர்கள் குறிப்பிடுகின்றார்கள். இது தொடர்பாக மாணவர்கள் குறிப்பிடம் போது,

> *"உயர்தரம் என்பது பாடசாலைக் கல்வி மாத்திரம் அல்ல மாறாக உயர்தரம் என்பது டியுசன் வகுப்புக் கல்வினை அடிப்படையாக கொண்டது. அதாவது பாடசாலை என்பது உயர்தர மாணவர்கள் பரீட்சை எழுதப்பயன்படுத்தும் அரச நிறுவனம் மாத்திரமே ஆகும். பாடக் குறிப்புக்கள், அதன் விளக்கம் என்பவற்றைப் பயன்படுத்த தனியார் வகுப்புக்களையே நாடவேண்டும், அவற்றின் உதவியுடன்தான் சிறந்த பெறுபேறுகளைப் பெறவதோடு, கல்வி இலட்சியத்தினையும் அடைந்து கொள்ள முடியும்"* (விஞ்ஞானப் பிரிவு, 2022).

மேலும் இக்கருத்து வெளிப்படும் வகையில் மற்றுமொரு மாணரின் விளக்கத்தினை நோக்குகின்ற போது.

> *"நான் முதலாம் தவணைக்குப் பின்னரே தனியார் வகுப்புக்களுக்கு சென்றேன். இதனால் என்னால் முன்னைய தவணையினை விட ஏனைய தவணைகளில் சிறந்த பெறுபேறுகளை பெற முடிந்தோடு, சாதாகமான கல்வியடைவும் ஏற்பட்டுள்ளது. இதனால் தனியார் வகுப்புக்கல்வி மூலம் எனது கல்வி இலட்சியத்தினை அடைந்து கொள்ள முடியும் என நம்புகின்றேன்"* (கலைப்பிரிவு பிரிவு, 2022).

இதே போன்று தனியார் வகுப்புக் கல்வியின் தெளிவான மற்றும் அதிகமான விளக்கத்தின்னூடா கல்வியடைவினையும், இலட்சியத்தினையும் அடைந்து கொள்ள முடியும் என மற்றுமொரு மாணவண் குறிப்பிடுகையில்.

> *"தனியார் வகுப்புக்களில் பாடசாலைகளைவிட தெளிவாகவும், அழகான முறையிலும் அதிகமான பாடக் குறிப்புக்கள் வழங்கப்படுகின்றன. அதனால் தனியார் வகுப்புக்களுக்கு செல்வதனால் தெளிவாக கற்று பரீட்சையினை இலகுவான*

> *எழுதுவதனால் சிறந்த பெறுபேறுகள் கிடைப்பதோடு, ை சித்தி பெற்ற பாடங்களில் யு சித்தி பெற்றுக் கொள்ள முடிகின்றது. இதன் காரணமாக நான் தொடர்ச்சியாக தனியார் வகுப்புக்களுக்கு செல்கின்றேன்''* (கலைப்பிரிவு பிரிவு, 2022).


எனவே மேற்குறித்த பதிலளித்தவர்களின் விளக்கங்கள் தனியார் வகுப்புக்கள் அவர்களின் இலட்சியத்தினை அடைவதற்கு உதவியாக இருக்கின்றது என்பதை விளக்குகிறது.

இவ்வறான ஆய்வு தரவுகளோடு ஏனைய ஆய்வுகளின் முடிவுகளை நோக்குகின்ற போது. பெரும்பான்மையான மாணவர்கள் உயர்தரத்தில் சித்தியடைய வேண்டும், பல்கலைக்கழக வாய்ப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக தனியார் வகுப்புக்களுக்கு செல்கின்றார்கள் ஹபாஸ்னெஹ் மற்றும் அல்-மைமி (2006) என கண்டறிகின்றாரகள்.

மேலும், தமயேந்தி (2017) இலங்கையில் பெரும்பான்மையான மாணவர்கள் மூன்று காரணிகளினால் தனியார் வகுப்புக்களுக்கு செல்கின்றனர். அவை, பாடத்திட்டத்தில் உள்ளவற்றை மேலதிகமாக கற்க வேண்டும் என்கின்ற ஆசை, பரீட்சையில் அதிக பெறுபேறுகளைப் பெறவேண்டும், குறைவான அடைவைப் பெறும் மாணவர்களக்குகாகன தனிப்பட்ட கவனிப்பு இன்மை போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துவமாக அடையாளப்படுத்துகின்றார். மனித தேவைகளை படிநிலைப்படுத்தி மஸ்லோ (1928), மனிதர்கள் தங்களது வாழக்கையில் உயரவான அடைவினை அடைந்து கொள்ள வேண்டும் என்பதற்காக பல்வேறு வகையான முயற்ச்சிகளை மேற்கொள்கிறார்கள் என்கின்றார். எனவே இங்கும் மாஸ்லோ குறிப்பிடுவது போன்று மாணவர்கள் தங்களது கல்வி இலயட்சியத்தினை அடைந்து கொள்ள வேண்டும் என்பதற்காக தனியார் வகுப்புக்களை நாடுகின்றது குறிப்பிடத்தக்கது.
எனவே பெரும்பான்மையான மாணவர்கள் தனியார் வகுப்புக்கு செல்வதனால் சிறந்த கல்வியடைவினையும், பரீட்சைப் பெறுபேறுகளையும் மற்றும் கல்வி இலட்சியத்தினையும் அடைந்து கொள்ள முடியும் என்கின்ற மனநிலைகளால் தனியார் வகுப்புகளுக்கு செல்கின்றமை இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது.

### 5.1.2. குழுக்களின் செல்வாக்கு

ஆளிடைக்கவர்ச்சியானது மனிதர்களின் நடத்தைகளை வடிவமைக்கின்றன (போல்சென், 2008), குறிப்பாக தன்னை நெருங்கியுள்ளவர்களின் மனோநிலை, செயற்பாடுகள் என்பனவற்றில், அவர்களை சுற்றியுள்ளவர்களின் கவர்ச்சி, செயற்பாடுகள் என்பனவை செல்வாக்குச் செலுத்துகின்றன என மேலும் குறிப்பிடுகின்றார். இங்கு இரண்டாம் நிலைக் குழுக்கள் என்பவை நண்பர்கள், அயலவர்கள், உறவினர்கள், ஏனைய மாணவர்கள் மற்றும் சிரேஂட மாணவர்கள் என்பவர்களை குறிக்கின்றது. இவ்வகையில் இவ்வாய்வுப் பிரதேசத்தினை நோக்கும் போது, மாணவர்கள் தனியார் வகுப்புக்களை நாடுவதில் செல்வாக்குச் செலுத்தும் உளவியல் காரணிகளில் ஏனையவர்களின் கவர்ச்சி செல்வாக்குச் செலுத்துகின்ற என்பதையும் ஆய்வு வெளிப்படுத்துகின்றது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில் அறுபத்தாறு வீதமான (66மூ) மாணவர்கள் ஏனையவர்கள் தனியார் வகுப்புக்களுக்கு செல்வதனை போன்று தானும் தனியார் வகுப்புக்கு செல்வதாகவும், எழுபத் ஏழு வீதமான (77மூ) மாணவர்கள் நண்பர்கள் தனியார் வகுப்புக்களுக்குச் செல்வதனால் செல்வதாகவும், என்பத்து ஒரு வீதமான (81மூ) மாணவர்கள் தனது சிரேஂட மாணவர்கள் தனியார் வகுப்புக்களுக்குச் சென்று சிறந்த பரீட்சை பெறுபேறுகளைப் பெற்றதனால் செல்வதாகவும் ஆய்வு அடையாளப்படுத்துகின்றது. அவற்றினை பின்வரும் வரைபு விளக்குகின்றது.




வரைபடம் 5.1.2 : மாணவர்களின் தனியார் வகுப்பு மீதான இரண்டாம் நிலைக் குழுக்களின் கவர்ச்சி
(மூலம்: முதலாம் நிலைக் கள ஆய்வு, 2022)

இவ் வரைபடத்தின்னடிப்படையில் இம் மூன்று காரணிகளும் ஆய்வுக்குட்படுத்தபட்டவர்களில் கவர்ச்சியினை ஏற்படுத்தியதன் காரணமாக, மாணவர்கள் தனியார் வகுப்புக்கள் மீது ஆர்வத்தினை செலுத்துத முடிந்துள்ளது என்பதனை இங்கு அடையாம்காண முடிகின்றது. இதுபற்றி மாணவர் ஒருவர் குறிப்பிடுகையில்

*''நான் ஆரம்பத்தில் தனியார் வகுப்புக்களுக்குச் செல்லவில்லை பின்னர் எனது வகுப்பில் உள்ள அனைவரும் தனியார் வகுப்புக்களுக்கு செல்கின்றாரகள், நான் மாத்திரம் செல்லவில்லை இதனால் ஏனையவர்கள் தன்னைவிட அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொள்வார்கள் என்பதனால் நானும் அவர்களைப் போன்று தனியார் வகுப்புக்களுக்கு சென்றேன்''* (கலைப்பிரிவு பிரிவு, 2022).


இதே போன்ற மற்றும்மொரு பதிலளித்தவர்கள் குறிப்பிடுகையில்

*''எனது பக்கத்து வீடுகளில் என்னுடன் கல்வி கற்கும் இரு மாணவர்கள் உள்ளனர் அவர்கள் இருவரும் தனியார் வகுப்புக்களுக்கு தொடர்ச்சியாக செல்வதன் காரணமாக நனது பெற்றோர்கள் அவர்களை உதாரணம்மாக எடுத்து என்னிடம் அடிக்கடி பேசுவார்கள். அத்தோடு நீங்களும் அவர்கள் செல்கின்ற வகுப்புக்குச் சென்றால் இவர்களைவிட அதிகமான பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று குறிப்பிடுவதனால், நானும் அவர்களைப் போன்று தனியார் வகுப்புக்களுக்கு செல்ல ஆரம்பித்தேன்''* (கலைப்பிரிவு பிரிவு, 2022).

எனவே இவ் கருத்துக்களின்னடிப்படையில், தனியார் வகுப்புக்களுக்கு பெரும்பாலான மாணவர்கள் செல்வதில், அவர்களின் நண்பர்கள் தனியார் வகுப்புக்களுக்க செல்வது காரணமாக அமைகின்றது. போவ்லஸ் மற்றம் ஜின்டிஸ் (1970) என்பவர்கள், கைத்தொழில் சமூகத்தில் கல்வி நிறுவனமானது, சமூகத்திற்கு ஏற்றால் போன்றவர்களை உருவாக்குவதில் சிறந்த அடைவினை ஏற்படுத்துகின்றது. மேலும், கல்வி என்பது ஒரு சமூகமயமாக்க நிறுவனமாக தொழில்படுகின்றது என்பதாக கிடின்ஸ் (2012) குறிப்பிடுகின்றார்.

மேலும் இவர்கள் கல்வியின் சமூக தொழில்பாடு தொடர்பாக விளக்கும் போது, தொழில் நிறுவணங்களின் நிர்வாகங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுவதனை போன்று பாடசாலை நிர்வாககமும் படிநிலைப்படுகிகன்றது. இந்த நிலை தவிர்கக் முடியாத ஒன்று, அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கின்ற ஏனை கல்வியலாளர்களின் கருத்தினை போவ்லஸ் மற்றும் ஜின்டிஸ் எதிர்கின்றனர்.

எனவே போவ்லஸ் மற்றும் ஜின்டிஸ் என்பவர்களின் கருத்தின்படி அமெரிக்காவில் காணப்படும் பாடசாலைகள் மாணவர்கள் தொழில்துறைக்கு ஏற்றல் போல் கற்பிக்கப்படுகின்றார்கள். என்பதை விளங்கிக் கொள்ள முடிகின்றது. ஆகவே, மாணர்கள் உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று, பல்கலைக்கழக வாய்பினை பெறுவதின்னூடாக தொழில் சந்தைக்குள் இலகுவாக செல்ல முடியும் என்கின்ற நோக்கத்திற்காக தனியார் வகுப்புக் கல்வியை நாடுகின்றனர். இவ்வாய்வுப் பிரதேசத்திலும், தொழில்துறைக்கு ஏற்றால் போல் கல்வியடைவினை அடைந்து கொள்ள கல்வி நிலையங்கள் இயங்குகின்றமையும், இதனால் மாணவர்கள் அதன்பால் ஈர்க்கப்படுவதனையும் அடையாளம்காண முடிகின்றது.அதேபோல, மாணவர்களின் தனியார் வகுப்பு ஆர்வத்தில் நண்பர்களின் கவர்ச்சி செல்வாக்குச் செலுத்துகின்றமையும் ஆய்வு வெளிப்படுத்துகின்றது, இவ்வாறு கண்டறிகின்றது. அதவது ஆய்வுக்குட்படுத்தப்ட்ட எழுபத் ஏழு வீதமான (77மூ) மாணவர்கள் அவர்களின் நண்பர்களின் கவர்ச்சியினால் தனியார் வகுப்பு செல்கின்றார்கள். இங்கு நண்பர்களின் கவர்ச்சியில் ஆண், பெண் இரு பாலாரும் செல்வாக்குச் செலுத்துகின்றார்கள். இவ் எழுபத் ஏழு வீதமான (77மூ) மாணவர்களில் முப்பதொரு வீதமான (31மூ) மாணவர்கள் நெருங்கிய நண்பர்களின் தனியார் வகுப்பு செயற்பாட்டினால் கவரப்படுகின்றார்கள். அதேபோன்று, இருபத்தாறு வீதமான (26மூ) எதிர்பால்நிலை நண்பர்கள் தனியார் வகுப்புகளுக்கு செல்வதனால் கவரப்படுகின்றார்கள், மற்றும் இருபது வீதமான (20மூ) மாணவர்கள் இரு பால்நிலைலும் தனியார் வகுப்புக்களுக்குச் செல்லும் நிலைமையில் கவரப்படுகின்றார்கள். இவற்றனை பின்வரும் வரைபு தெளிவாக விளக்குகின்றது.




வரைபடம் 4.3.2.1: தனியார் வகுப்புக்களை நாடுவதில் நண்பர்களின் மூலமான கவர்ச்சி நிலை
(மூலம்: முதலாம் நிலைக் கள ஆய்வு, 2022)

குறிப்பாக, மாணவர்கள் தமது நெருக்கமான நண்பர்களுடன் தொடர்ந்து இருந்து வருவகின்றார்கள். அவர்கள் எல்லோரும் தனியார் வகுப்புக்களுக்கு செல்வது அனைவரும், அவர்களுடன் தொடர்ந்து இருப்பதற்கு துணைபுரிவதனால், குழுவில் ஒருவராக தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமைவதாக குறிப்பிடுகின்றார்கள். இதுபற்றி ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நபர் ஒருவர் குறிப்பிடுகின்ற போது

> *"நான் எங்கு சென்றாலும் எனது நண்பனுடனே செல்வேண், எனது நண்பன் சிறந்த பரீட்சை பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக தனியார் வகுப்புக்கு நாடுகின்றார் அவர் செல்வதனால் நனும் சிற்ந் பெறுபேறுகளை பரீட்சையில் பெறவேண்டும் என்பதற்காக அவரை போன்று தனியார் வகுப்புக்களுக்கு செல்வதோடு. ஏங்கள் இருவருக்கும் பிடித்த இரு பெண்கள் தோழிக்ள செல்லும் தனியார் வகுப்பு நிலையங்களுக்கே நாங்கள் செல்கின்றோம்"* ( விஞ்ஞாப் பிரிவு, 2022).

மற்றும்மொருவர் குறிப்பிடுகின்ற போது

> *"நான் வகுப்பில் பரீட்சைத் தரப்படுத்தலில் ஐந்து அல்லது நான்காவது நிலையில் உள்ளேன், என்னைவிட எனது நான்கு நண்பர்கள் முன்னிலையில் உள்ளனர். இவர்கள் தனியார் வகுப்புக்களை நாடுகின்றவர்கள் ஆனால் நான் வீட்டில் எனது சகோதரியின் பாடக்குறிப்புக்களை கொண்டு மேலதிகமான கற்றல்களில் ஈடுபட்டேன், ஆனால் அவர்களைவிட முன்னிலைக்கு செல்ல முடியாது இருப்பதனால் நானும் அவர்கள் செல்லும் தனியார் வகுப்புக்களுக்கு செல்கின்றேன்*" (கலைப்பிரிவு, 2022).

எனவே பெரும்பான்மையான மாணவர்கள் தனியார் வகுப்புக்களை நாடுவதில் அவர்களின் நண்பர்களின் கவரச்சி செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை ஆய்வு வெளிப்படுத்துகின்றது. அதாவது தங்களது நண்பர்களும் தனியார் வகுப்புக்களுக்குச் சென்று பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள் என்பதற்காகவும், தனக்கு பிடித்த நண்பர்களை சந்திப்பதற்கான வாய்ப்பு போன்ற காரணிகளினால் செல்கின்றார்கள். இங்கு நண்பர்கள் ஒத்த பால்லாராகவும், எதிர் பால்லாராகவும் உள்ளனர் என்பதை ஆய்வு கண்டறிந்துள்ளது.

இவற்றோடு பாடசாலை மாணவர்களின் தனியார் வகுப்பு ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் உளவியல் கவர்ச்சிக் காரணிகளில் சிரேஷ்ட மாணவர்களின் கவர்ச்சியும் செல்வாக்குச் செலுத்துவதாக ஆய்வு அடையாப்படுத்கின்றது. அதாவது ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில் எண்பதொரு வீதமான (81%) மாணவர்கள் தங்களது சிரேஷ்ட மாணவர்கள் தனியார் வகுப்புக்ளுக்கு செல்கின்றார்கள், சென்று சிறந்த பரீட்சை பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள் இதனால் அவர்களைப் போன்று ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களும் தனியார் வகுப்புக்களுக்கு செல்கின்றார்கள். என்பதை ஆய்வு கண்டறிவதுடன், எவ்வாறு மாணவர்கள் தங்களது சிரேஷ்ட மாணவர்களின் கவர்ச்சியினால் தனியார் வகுப்புக்களுக்கு செல்கின்றார்கள் என்பதை, பின்வரும் விளக்கம் அடையாளப்படுத்துகின்றது.

> *"எனது வீட்டுக்கு அருகே எனது சிரேஷ்ட மாணவர் ஒருவர் உள்ளார் அவர் தற்போது பல்கலைக்கழகத்தில் கற்கின்றார். இவர் உயர்தரம் கற்கும் போது தனியார் வகுப்புக்களக்கு சென்று 3A சித்திகளை பெற்றார், இதன்காரணமாக அவர் சென்ற தனியார் வகுப்பு நிலையத்திற்கு சென்று, அவரைப் போன்று சிறந்த பெறபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனால், நானும் தனியார் வகுப்புக்ளுக்கு செல்கின்றேன்"* (விஞ்ஞாப் பிரிவு, 2023).

*இதே போன்று மற்றுமொரு மாணவன் குறிப்பிடும் போது*

> *''நான் கலைத்துறை கற்பதனால், ஆரம்பத்தில் தனியார் வகுப்புக்களுக்கு செல்ல தேவையில்லை என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் எனது ஏனைய வகுப்பு தோழர்கள் தனியார் வகுப்புக்களுக்கு செல்வதோடு, என்னிடம் ஒரு சிரே'ட மாணவர் குறிப்பிட்டார், அவர் தனியார் வகுப்பபுக்களுக்கு சென்றதன் காரணத்தினாலே பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற முடிந்தது, இதனால் என்னையும் தனியர் வகுப்புக்குச் செல்லமாறு கூறினா'ர்* (கலைப்பிரிவு, 2023).

ஆகவே, பெரும்மையான மாணவர்கள் தங்களது சிரே'ட மாணவர்கள் தனியார் வகுப்புக்கு சென்று சிறந் க்ல்வியடைவினை பெற்றுக் கொண்டுள்ளனர், என்கின்ற சிரே'ட மாணவர்களி கவர்ச்சியின் காரணமாக, ஆய்வுக்குட்படுத்தப்ட்ட மாணவர்களும் சிரே'ட மாணவர்கள் தனியார் வகுப்புக்களுக்கு சென்றது போன்று செல்கின்றார்கள், என்பதை ஆய்வு அடையாளப்படுத்துகின்றது.

### 5.1.3. தனியார் வகுப்பு நிலையங்கள்

தனியார் வகுப்புக்களை நோக்கிய மாணவர்களின் ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் உளவியல் காரணிகளில் தனியார் வகுப்புக்களின் கவர்ச்சியான கட்டமைப்பும் செல்வாக்குச் செலுத்துவதாக ஆய்வு குறிப்பிடுகின்றது. அதாவது தனியார் வகுப்புக்களின் கவர்ச்சியான விளம்பரங்கள், நவீன கல்வி முறை, ஆசிரியர்களின் கவர்ச்சியான பாடவிளக்கம், தெளிவான பாடக்குறிப்புக்கள் போன்ற தனியார் வகுப்பு நிலையங்களின் கவர்ச்சியான செயற்பாடுகளினால் மாணவர்கள் கவரப்பட்டு இத் தனியார் வகுப்பு நிலையங்களுக்கு செல்கின்றார்கள். அந்தவகையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் தொன்னுதேழு வீதமான (97மூ) அவர்கள் தனியார் வகுப்பு கல்வி நிலையங்களின் கவர்ச்சியின் காரணமாக தனியார் வகுப்புக்களை நாடுகின்றார்கள். இது தொடர்பாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள் குறிப்பிடும் போது.

> *''பாடசாலையில் கற்பின்கின்ற ஆசிரியர்களைவிட, தனியார் வகுப்புக்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் அறிவினாலும், தோற்றத்தினாலும் அழகாக இருப்பதனாலலும், அவர்களின் பாடவிளக்கம் தெளிவானதாகவும், கவர்சியான கணனி முறையில் அமைந்திருப்பதனால். அதாவது மல்டிமீடியா, வீடியோ போன்றவற்றினால் பாடங்களை விளக்குவதனால் அவ்வாறான தனியார் வகுப்புக்களுக்குச் சென்று கற்க் வேண்டும் என எண்ணம் தோன்றுவதோடு. நான் தனியார் வகுப்புக்களின் தெரிவினை, அவர்களின் விளம்பரங்களை அடிப்படையாக கொண்ட தெரிவு செய்கின்றேன்''* (விஞ்ஞானப் பிரிவு, 2022).

மேலும் ஒரு மாணவன் குறிப்பிடுகின்ற போது

> *''பாடசாலையில் கறும்பலகைகளிலும், வைட்போட் போன்ற பழைமையான முறைகளில் கற்பிக்கின்றார்கள். ஆனால் நான் செல்கின்ற தனியார் வகுப்பில் உயிரியல் பாடவிளக்கமானது மல்டிமீடியா, வீடியோ போன்றவற்றினால் விளக்கப்படுவதனால் தெளிவான விளக்கத்தினை பெற்றுக் கொள்ள முடிகின்றது என்பனதல் தொடர்ச்சியாக தனியார் வகுப்புக்களுக்கு செல்கின்றேன்''* (விஞ்ஞானப் பிரிவு, 2022).

மற்றுமொரு மாணவர் குறிப்பிடுகின்ற போது *''தனியார் வகுப்பு ஆசிரியர்களின் பாடவிளக்கமானது, பாடசாலை ஆசிரியர்களின் பாடவிளக்கத்தினைவிட தெளிவாகவும், கவர்ச்சியாகவும் உள்ளது. மேலும் விரிவான பாடக்குறிப்புக்கள், தனியார் வகுப்பு ஆசிரியர்கள் வழங்குவதனால் தனியார் வகுப்புக்களுக்கு செல்ல வேண்டும் என ஆர்வம் ஏற்படுகின்றது''* (கலைப் பிரிவு, 2022).

எனவே கல்வி இலட்சியம், கல்வியடைவு, போட்டி மனப்பாங்கு, நண்பர்களின் கவர்ச்சி, ஏனைய மாணவர்களின் கவரச்சி, சிரே'ட மாணவர்களின் கவரச்சி மற்றும் தனியார் வகுப்புக்களின் கவர்ச்சி போன்ற உளவியல் காரணிகளின் செல்வாக்கினால் பெரும்பான்மையான மாணவர்கள் தனியார் வகுப்புக்களை நாடுகின்றனர்.

## 6. முடிவுரை

இவ் ஆய்வுப் பிரதேசத்தில்லுள்ள பெரும்பாலான சிரே'ட இரண்டாம் நிலை மாணவர்கள், தனியார் வகுப்புக்களில் ஆர்வம் செலுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிகளாக உளச்சமூக காரணிகளாக மாணவர்களிடம் காணப்படுகின்ற சிறந்த பெறுபேற்றை அடைந்து கொள்ள வேண்டும் என்கின்ற இலட்சியமும், அவர்களின் பிரதேசதில் கல்வியில் காணப்படுகின்ற போட்டி மனப்பான்மைகளும், அவர்களைச் சுற்றியுள்ள குடும்ப உறவினர்களின்

ஊக்குவிப்புக்களும், ஏனைய மாணவர்களின் சிறந்த பெறுபேறுகளும் அதிகமானவர்களைத் தனியார் வகுப்புக்களை நோக்கிச் செலுத்துகின்றமை. அதாவது மாணவர்களின் தனியார் வகுப்புக் கல்வி ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் ஒன்றாக உளச்சமூகக் காரணிகளை ஆய்வு கண்டறிந்துள்ளது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களின் தொன்னுத்தொரு (91%) மாணவர்கள் கல்வி இலட்சியத்தினை அடைந்து கொள்ள வேண்டும் என்பதற்காக தனியார் வகுப்புக்களுக்கு செல்கின்றார்கள், அறுபத்தாறு வீதமான (66%) மாணவர்கள் ஏனையவர்களின் கவர்ச்சியினாலும், தனியார் வகுப்புகளுக்கு செல்கின்றார்கள் என்பதை அடையாளப்படுத்துகின்றது. அதாவது, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட தொன்னுற்றொரு வீதமான (91%) மாணவர்கள் பாடசாலையில் கல்வியினை பெற்று, அதற்கு மேலதிகமாக தனியார் வகுப்புக்களில் அறிவினைப் பெற்றுக் கொள்வதனூடாக பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என நம்புகின்றனர். இத்தகைய நம்பிக்கை அவர்கள் தனியார் வகுப்புக்களை நோக்கி செல்வதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. மேலும் தொன்னுதொன்பது வீதமான (99%) மாணவர்கள் தனியார் வகுப்புக்களுக்கு சென்ற பின்னர் சாதாகமான கல்வி அடைவு ஏற்பட்டுள்ளதாகவும், மேலதிக கற்றல் மூலம் சிறந்த பரீடசைப் பெறுபேறுகளை பெற முடியும் என தொன்னுதெழு வீதமான (97%) மாணவர்கள் நம்புகின்றார்கள்.

அதேபோல், ஏனையவர்களின் கவர்ச்சி செல்வாக்குச் செலுத்துகின்ற என்பதையும் ஆய்வு வெளிப்படுத்துகின்றது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில் அறுபத்தாறு வீதமான (66%) மாணவர்கள் ஏனையவர்கள் தனியார் வகுப்புக்களுக்கு செல்வதனை போன்று அவர்களும் தனியார் வகுப்புக்கு செல்வதாகவும், எழுபத்தெழு வீதமான (77%) மாணவர்கள் நண்பர்கள் தனியார் வகுப்புக்களுக்குச் செல்வதனால் செல்வதாகவும், எண்பத்தொரு (81%) மாணவர்கள் அவர்களது சிரேஷ்ட மாணவர்கள தனியார் வகுப்புக்களுக்குச் சென்று சிறந்த பரீட்சை பெறுபேறுகளைப் பெற்றதனால் செல்வதாகவும் ஆய்வு அடையாளப்படுத்துகின்றது.
மேலும், மாணவர்களின் தனியார் வகுப்பு ஆர்வத்தில் நண்பர்களின் கவர்ச்சி செல்வாக்குச் செலுத்தும் விதத்தினை ஆய்வு, இவ்வாறு கண்டறிகின்றது. அதவது ஆய்வுக்குட்படுத்தப்பட்ட எழுபத் ஏழு வீதமான (77%) மாணவர்கள் அவர்களின் நண்பர்களின் கவர்ச்சியினால் தனியார் வகுப்பு செல்கின்றார்கள். இங்கு நண்பர்களின் கவர்ச்சியில் ஆண், பெண் இரு பாலாரும் செல்வாக்குச் செலுத்துகின்றார்கள். இவ் எழுபத் ஏழு வீதமான (77%) மாணவர்களில் முப்பதொரு வீதமான (31%) மாணவர்கள் ஒத்த பால்நிலை நண்பர்களின் தனியார் வகுப்பு செயற்பாட்டினால் கவரப்பட்டுள்ளனர், இருபத்தாரு வீதமான (26%) எதிர்பால்நிலை நண்பர்களின் தனியார் வகுப்பு செயற்பாட்டினால் கவரப்பட்டுள்ளனர் மற்றும் இருபது வீதமான (20%) மாணவர்கள் இரு பால்நிலை நண்பர்களின் தனியார் வகுப்பு செயற்பாட்டினால் கவரப்பட்டுள்ளனர்.

இவற்றோடு பாடசாலை மாணவர்களின் தனியார் வகுப்பு ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் உளவியல் கவர்ச்சிக் காரணிகளில் சிரேஷ்ட மாணவர்களின் கவர்ச்சியும் செல்வாக்குச் செலுத்துவதாக ஆய்வு அடையாப்படுத்கின்றது. அதாவது ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில் எண்கத்தொரு வீதமான (81%) மாணவர்கள் தங்களது சிரேஷ்ட மாணவர்கள் தனியார் வகுப்புக்ளுக்கு செல்கின்றார்கள், சென்று சிறந்த பரீட்சை பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள் இதனால் அவர்களைப் போன்று ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களும் தனியார் வகுப்புக்களுக்கு செல்கின்றார்கள். எனவே இவ்வாறான உளச்சமூக் காரணிகள் மாணவர்கனின் தனியார் வகுப்பு ஆர்வத்தில் செல்வாக்குச் லெசலுத்துகின்றன என்பதை ஆய்வு கண்டறிந்துள்ளது.

## REFERENCES

Alishana. (2010). *A Study on the role of Private Education Institution for the Secondary and Tertiary Education Development in Kalmunai Municipal Area From 2004- 2009*. Unpublished Thesis (B.A), Department of Social Sciences. South Eastern University of Sri Lanka).

Asanka, P. (2012). *Demand for private tutoring in a free education country: the case of Sri Lanka*. Retrieved From https://www.researchgate.net/publication/258521104.

Bineth, A. (2020). Towards A Sociological of Curiosity; Theoretical and Empirical Consideration of the Epistemic Drive Notion. (Master thesis, Central European University, Budapest, Hungary). Retrieved from https://sociology.ceu.edu/sites/sociology.ceu.hu/files/profilephd/files/499/binethmatscsin gle.pdf

Bray,M & Kwok,P.(2003). Demand for private supplementary tutoring: Conceptual consideratins, and socio- economic patterns in Hong Kong. Economic Education Review. Retrieved from https://www.sciencedirect.com/science/article/abs/pii/S0272775703000323

Damayanthi,B.W.R.(2017). Economics of Private tutoring in Sri lanka: A phenomenologyical study.Journal of Education and Practice.Retrieved From https://www.iiste.org/.

Damayanthi,B.W.R.(2018). The Determination of Demand for pivate tutroring in Sri Lanaka.Published by European Centre for Research Training and Development UK.Retrieved From https://www.eajournals.org.

Davies,S.(2004). School choice by Default? Understanding the Demand for private Tutoring in Canada. America Journal If Education. Retrieved From https://www.journals.uchicago.edu/doi/abs/10.1086/383073

Gafoor, A.k & Sunummel,M.(2007).Effect of Priavte tuition on Acchivement in Science of seconfary Scool Pupils.Journal of Community Guidance & Research.

Giray,b & Aysit,t.(2014.Does private tutoring increase students' academic performance from Turkey. Discussion paper series.SDD

Gobiga,K.(2017). The Study on Parents Perception on Emerging Trend Of Private Tuition Classes Towards Their Children's Education in Kalwanchikudy D.S Division in Batticaloa. SEUSL. Retrieved from http://www.seu.ac.lk/researchandpublications/symposium/7th/Inaternational%20Sy mpos ium%202 017%20-%20SEUSL%20(9).pdf

Habashneh,M & Al-maimi,E.(2006).Survey on the Private Tutoring Phenomenology reasons and its educational Implications. Ministry of Education: Department of research and Educational Development.

Hartary,F & Renner, B.(2018). Social Curiosity and Gossip: Related but different drives of Social functioning. PLOS ONE. https://journals.plos.org/plosone/article?id=10.1371/journal.pone.0069996

Jamie, J & Shoron, Z.(2018). Curiosity in Schools. Nova science publishers. Retrieved fromhttps://www.researchgate.net/publication/329569586_CURIOSITY_IN_SCHOO LS JiYunLee.(2013).Private tutoring and its impact on students' academic Achievement, formal Scooling, and Educational inequality. Columbia University.

Management Study Guide .(2018). Social Factors affecting Consumer Behaviour. Retrieved From https://www.managementstudyguide.com/social-factors-affecting-consumer- behaviour.htm

Qaise, S & Ishtiaq,H.(2014).Efects Of private tuition on the Academic achievement of secondary school Student's' in subject of Mathematics in Kohat Division, Pakistan. Retrieved From https://www.researchgate.net/publication/275966799.

Rachel,C.(2016).Estimating the impact of private tutoring on academic Performance: Primary Students in Sri Lanka. Retrieved From https://www.researchgate.net/publication/3046177.

Rasanjalee,M.A.N.P.(2009).A Socilogical perspective of educational problems in sri lanka: Case in combo.Retrieved From https://www.researchgate.net/publication/311886468.

Sathar,AR.A.(2015). Manpurum Maruthamunai- Varalaattup Pathivukal. Community Development Centre. Maruthamunai. Sri lanka.

Saul, E & Adeline,P.(2018). Privatization in Developing Countries: What Are the Lessons of Recent Experience? *The World Bank Research Observer.* Retrieved From https://academic.oup.com/wbro/article/33/1/65/4951686.

Shandru, M.(2016). Impacts of advance level formal education system by the domination of private tution class: the research based on manmunai north area, educational zone- batticaloa. 6th International Symposium 2016. South Eastern University of Sri lanka. Retrieved From http://ir.lib.seu.ac.lk/bitstream/handle/123456789/2012/IntSym_2016_proceeding_fi nal_ 2_%281% 29_- _Page_765-775.pdf?sequence=1&isAllowed=y.

Shankar, A & Durrani, M.(2013). Curiosity and Education: A white paper. Center for curiosity. Retrieved From https://centerforcuriosity.com/wp-content/uploads/bsk-pdf-manager/WhitePaper- CuriosityandEducation__2.pdf